**செய்தி வெளியீடு எண்: 47/2025** **நாள்: 05.06.2025**

**பத்திரிக்கைச் செய்தி**

# உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் மெட்ரோஸில் மரக்கன்றுகள் நடப்பட்டது

ஒவ்வொரு ஆண்டும், ஜூன் 5-ஆம் தேதி உலக சுற்றுச்சூழல் தினம் கடைபிடிக்கப்படுகிறது. இது சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அதற்கான நடவடிக்கைகளை ஊக்குவிக்கவும் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டுக்கான கருப்பொருள் "Beat Plastic Pollution" என்பதாகும். இது பிளாஸ்டிக் கழிவுகளைக் கையாள்வதன் அவசரத் தேவையையும், நிலையான நடைமுறைகளை ஊக்குவிப்பதன் அவசியத்தையும் வலியுறுத்துகிறது.

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, இன்று (05.06.2025) சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.மு.அ.சித்திக் இ.ஆ.ப., அவர்கள் நந்தனத்தில் உள்ள சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் மெட்ரோஸில் மரக்கன்றை நட்டு, இந்த நிகழ்வினை தொடங்கி வைத்தார். இந்த முன்முயற்சியின் ஒரு பகுதியாக, சென்னை நகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பல்வேறு இடங்களில் 1000-க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்படுகின்றன. இந்த முயற்சி, நிறுவனத்தின் விரிவான சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டத்துடன் (Environmental Management Plan) ஒத்துப்போவதோடு, தேசிய மற்றும் உலகளாவிய சுற்றுச்சூழல் இலக்குகளை ஆதரிக்கும் வகையிலும் செயல்படுகிறது. மேலும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், பிளாஸ்டிக் கழிவுகள் பல்வேறு சுற்றுச்சூழல் அமைப்புகளில் ஏற்படுத்தும் பாதிப்புகள் குறித்து ஒரு கருத்தரங்கமும் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் நிதி இயக்குநர் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி, அமைப்புகள் மற்றும் இயக்கத்தின் இயக்குநர் திரு. மனோஜ் கோயல், தலைமைப் பொது மேலாளர்கள் திரு. ஜி. ராஜரத்தினம் (மனிதவளம்), திரு. ஏ.ஆர்.ராஜேந்திரன், (மெட்ரோ இரயில், சமிக்ஞை மற்றும் தொலைத்தொடர்பு), தலைமை ஆலோசகர் திரு. ராஜீவ் ஸ்ரீவஸ்தவா (சுற்றுச்சூழல்) மற்றும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தனது செயல்பாடுகளில் நிலைத்தன்மையை பல பசுமை முன்முயற்சிகள் மூலம் தொடர்ந்து ஒருங்கிணைத்து வருகிறது:

- 40 மெட்ரோ இரயில் நிலையங்களும் மிக உயர்ந்த பசுமை கட்டிட தரநிலைகளை கடைபிடிப்பதன் மூலம் IGBC பிளாட்டினம் சான்றிதழைப் பெற்றுள்ளன.
- வழக்கமான மின்சார ஆதாரங்களைச் சார்ந்திருப்பதைக் குறைக்கவும், கார்பன் வெளியேற்றத்தைக் குறைக்கவும், நிலையங்கள் மற்றும் பணிமனைகளில் சூரிய மின் தகடுகள் (Solar Panels) பொருத்தப்பட்டுள்ளன.
- மெட்ரோ அலுவலகங்களில் காகிதம் மற்றும் பிளாஸ்டிக் பயன்பாட்டினை தவிர்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, மின்னணு நடைமுறைகளை ஊக்குவிக்கிறது. இதில் மின்னனு பயணச்சீட்டு பயன்பாடு உள்ளிட்ட முயற்சிகள் இடம் பெற்றுள்ளன.
- நகர்ப்புற சுற்றுச்சூழலை மேம்படுத்த தொடர்ச்சியாக மரம் நடும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பசுமை போக்குவரத்துக்கான அர்ப்பணிப்பை அங்கீகரிக்கும் விதமாக, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் சமீபத்தில் போக்குவரத்துத் துறையில் 2025-ஆம் ஆண்டுக்கான "உலகளாவிய சுற்றுச்சூழல் சிறப்பு நிறுவனம்" என்னும் உயரிய விருதைப் பெற்றுள்ளது. இந்தியாவில் இந்த கௌரவத்தைப் பெற்ற ஒரே மெட்ரோ இரயில் அமைப்பு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனமாகும்.

**வெளியீடு: மக்கள் தொடர்பு துறை,**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**